குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.எம்.பி.எண். 120/2026

ம.சா.2

2026–ம் ஆண்டு ஜுலை 10–ம் தேதி வெள்ளிக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயம் | தொழில் | |
| கணவர் பெயர் | வேலு | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.14 மணி,

Petition Kishansing present. Advocate Mr.V.Ramasamy present for accused.

**முதல் விசாரணை :**

1. நான் தாசமுத்திரத்தில் சர்ச் காம்பவுண்டில் குடியிருந்து வருகிறேன். மனுதாரர் எனது சகோதரர் ஆவார். கடந்த 12.08.2020 ஆம் தேதி நான் எனது தம்பி வீட்டிற்கு சென்றபோது எனது தம்பி வெளியே சென்றிருந்தார். அந்த சமயத்தில் நான் வீட்டில் இருந்த பொழுது எனது தம்பியின் வீட்டின் முன்பு உள்ளே சென்று வர முடியாத படி பெரிய பெரிய கற்களை போட்டு விட்டனர். அப்போது எனது தம்பி திரும்ப வீட்டிற்கு வந்தார் எனது தம்பி அவ்வாறு செய்தவர்களிடம் எதற்காக கற்களை எனது வீட்டின் முன்பு போடுகிறீர்கள் என்று கேட்டபோது அப்படித்தான் செய்வோம் என்றும் குடும்பத்தோடு நிர்மூலம் ஆக்கி விடுவோம் என்றும் கொலை மிரட்டல் விடுத்தனர் . இதன் பின்னிட்டு எனது தம்பியின் மனைவி பயந்த சுபாவம் உடையவர் என்பதால் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது அதன் பின்பு அவரை மருத்துவமனையில் சேர்த்தோம் .

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.24 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.10 17:23:53 +0530